பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 7உ (23—8—67) புதன் ★ வெளியீடு: ஆவணி 8உ (24—8—67) வியாழன் [இதழ்: 59

எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை

" இந்தியாவின் ஏற்றுமதி வாணிபம் குறைந்துவருகிறது; ரூபாயின் விலை மதிப்புக் குறைப்பினுல் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. டில்லியில் உள்ள நிர்வாக இயந்திரத்தின் மெத்தனத்தினுலும், வணிகர்களின் நாணயமின்மையாலும் நிலைமை இன்னும் சீர்கேடடைந்துள்ளது "

என்று. கருநாடக மாநில நிதி அமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே கூறியுள்ளார்.

தொல்லைகளிலிருந்து தொழிலாளர்களை மீட்போம்!

'நிலைமைகளைச் சீர்செய்வதற்குச் சிறிது அவகாசம் அவசியம்'

'வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தொழிலாளர்கள் கைவிட வேண்டும்'

கழகத் தலைவர்களின் உறுதி -- அமைச்சர் மாதவன் விளக்கம்

கோவை, ஆக. 22—

" ஏற்பட்டிருக்கும் நெசவாலை நெருக்கடி, கடந்தகால அரசின் கொள்கைகளின் விளைவேயாகும்.

" தற்பொழுதைய தி. மு. க. அரசு, தொழிலாளர்களின் அரசாகும்; ஆகையால், கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்ற காங்கிரசு ஆட்சியின் விளைவாக அனுபவித்துக் கொண்டுவரும் தொல்லைகளிலிருந்து தொழிலாளர்களை மீட்பது தமிழக அரசின் கடமையாகும்.

" தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்க எல்லா முயற்சிகளையும் அரசு செய்யும் என்பதையும், தொழிலாளர்களுக்குப் பக்கபலமாக என்றும் அரசு துணை நிற்கும் என்பதையும் உறுதி கூறிக்கொள்கிறேன்.

" நிலைமைகளைச் சீர்செய்வதற்குத் தொழிலாளர்கள், அரசாங்கத்துக்கு இன்னும் சற்று அவகாசம் தரவேண்டும். ஆகையால் இந்த நேரத்தில் வேலைநிறுத்தம் செய்வதைத் தொழிலாளர்கள் கைவிட வேண்டும். இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு அரசு தயாராகவே உள்ளது. தொழிலாளர்களின் கோரிக்கைகள் வெற்றிபெறுவதற்கான முயற்சிகளில், தங்கள் பதவி பறிபோவதானுலும் அஞ்சப் போவதில்லை என்பதில், கழகத் தலைவர்கள் உறுதியாக உள்ளனர் "

என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செ. மாதவன் இங்கு வ. உ. சி. பூங்காவில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

வற்புறுத்த இயலுமா ?

மேலும் பேசிய அமைச்சர் கோவை ஆலைகளின் நிலைமைகளையும், அரசின் கொள்கைகளையும் விளக்கிக் கூறியதாவது:—

" நிபுணர் குழுவின் பரிந்துரைக் கேற்பத் தமிழக அரசு, கோவையில் மூடிக்கிடக்கும் மில்களைத் திறக்க வசதியாக, ஒரு கோடி ரூபாய்க்குமேல் பாங்கிகள் கடன் தருவதற்குப் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கின்றன; இதன்படி, அடுத்த வாரத்திற்குள் ரூ, 18 இலட்சம் அளவுக்கு பாங்கிகள் தரவிருக்கின்றன.

அரசின் கடமை என்ன ?

ஆயினும், எல்லா ஆலைகளுக்கும், கடன் தருமாறு பாங்கிகளை வற்புறுத்த முடியாது; ஏனெனில், பாங்கிகளுக்கு, ஆலைகள்பற்றிப் பொருளாதார அடிப்படையில் நம்பிக்கை ஏற்பட வேண்டும். அரசாங்கமும் எல்லா ஆலைகளுக்கும் பண உதவி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள இயலாது; ஏனெனில், வரி செலுத்தும் குடிமக்களின் பணத்தைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

எவ்விதம் இயலும் ?

கோவை ஆலைகள் சிலவற்றின் பொருளாதார நிலைமை மிக மோசமானதாகும். உதாரணமாக ஓர் ஆலையின் சொத்து மதிப்பைவிட நூறு மடங்குக்கு மேல் நிலுவையுள்ளது. இந்த நிலைமையில் எந்த அரசுதான், முழுமையாக ஆராயாமல் பண உதவி செய்யும் ?

அரசே பரிசீலிக்கும் !

பொருளாதார ரீதியில் நல்ல நிலைமையில் உள்ள ஆலைகளுக்குப் பாங்கிகள் பணவுதவி செய்யவில்லையென்றுலும்கூட, அரசே நேரிடையாக உதவி செய்வது குறித்துப் பரிசீலிக்கும்."

வாசகர்களுக்கு!

ஒரு பிரச்சினையைப் பற்றிச் சிந்திப்பதற்குள் அடுத்த ஒன்று அதை வென்று விடுகிறது !

காலப்போக்கில் சொல்ல வேண்டிய கருத்துக்கள், வலிமையை எடை போடுவதாக உள்ளது !

எனவேதான், இனி திருவாளர் சந்தேகம் முன்போல் நீண்ட கட்டுரை வாயிலாக உங்கள்முன் வருவதோடு, அன்ருடம் சந்தித்து ஒரு சில வரிகள் பேசுவார் ! அதற்கு முன்னணியும் பின்னணியும் சேர்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு !

ஒரு சில நாட்களில் சொல்பவை, சிரிப்புக்காக மட்டுமே இருக்கும் ! அதேபோல், சிந்திப்பதற்கு மட்டும் கூறுபவையும் உண்டு !

அதிர்ச்சியினின்றும் காங்கிரசு மீளவில்லை!

'தலைகுனிவு' ஏற்படும் வகையில் ஒரிசா காங்கிரசுத் தலைவர் !

கட்டாக், ஆக. 23—

ஒரிசாவில் பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்த காங்கிரசுக் கட்சி, இன்னும் அதிர்ச்சியினின்றும் மீளவில்லை !

தற்போது காங்கிரசில் பிஜு பட்நாய்க்கின் அதிகாரம் செல்லுபடியாகவில்லை !

அத்துடன், காங்கிரசுக்கு 'தலைகுனிவு' ஏற்படும் வகையில் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது ;—'ஒரிசா காங்கிரசுத் தலைவரான திரு. பட்நாய்க், வருமான வரி வகையில் ஒரு கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கிருர்' என்பதுதான் அது! அவர் மட்டும் சொந்த முறையில் ரூ. 84 இலட்சம் வரி செலுத்த வேண்டும்; அவரது கம்பெனிகள் ஏறத்தாழ ரூ. 61 இலட்சம் வருமான வரி செலுத்த வேண்டும்.

'நல்லெண்ணத் தூதுவனுக அயல்நாடு செல்வேன்'

'நெசவாளர் துயர் துடைக்க வழிகோலுவேன்'

'டில்லி ஒத்துழைப்புத் தருமானுல் கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்குவேன்'-- முதலமைச்சர் அறிஞர் அண்ணு தெளிவுரை

கரிவலம்வந்தநல்லூர், ஆக. 22—

" மத்திய அரசு ஒத்துழைப்புத் தருமானுல், நான் வெளிநாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுவனுகச் சென்று, கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு அதிகமான வாய்ப்புக்களை உண்டாக்கி நெசவாளர்களின் அல்லல்களைக் குறைக்கத் தயாராக இருக்கிறேன் " என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் அறிவித்தார்.

கழகச் சாதனைகளைப் பொறுத்திருந்து பாருங்கள் !

மதுரையிலிருந்து கரிவலம்வந்த நல்லூருக்கு வருகைதந்த அறிஞர் அண்ணு அவர்கள், பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில், ஐந்தாண்டுகள் முழுவதும் அமைதியாக ஆளுவதற்குத் தி. மு. கழகத்தை அனுமதிக்குமாறும், கழகத்தின் சாதனையைப் பிறகு ஆராயுமாறும் எதிர்க் கட்சியினரைக் கேட்டுக்கொண்டார்.

ஓராண்டு அவசியம் !

மேலும் அவர், 'மக்களின் தேவைகளை ஆராய்ந்து திட்டமிடுவதற்குக் குறைந்தது ஓராண்டாவது தேவைப்படும்' என்றும் குறிப்பிட்டார்.

நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ள அரசு திட்டம்

சங்கரன்கோயில், ஆக. 22—

" தமிழக அரசு தனது நிதி வசதியைப் பெருக்கிக்கொள்வதற்கு வணிகத்துறையில் வேண்டுமானுலும் இறங்குமே தவிர, வரி விகிதங்களை அதிகப்படுத்தாது "

என்று அண்ணு அவர்கள், இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வணிகத் துறையில் அரசு புகுவது ஏன் ?

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது :—

"வணிகத் துறையில் புகுவது என்பது நமது அரசின் அடிப்படைக் கொள்கையாகும். இப்போதுள்ள வரி விகிதங்களே மிகவும் அதிகம். ஆகவே, கூடுமானவரையில் வரிப் பளுவை அதிகப்படுத்தாமல் இருப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்."

காங்கிரசு மேடைப் பேச்சாளருக்குக் காணிக்கை:

இருபதாண்டுச் சாதனை கேளீரோ!

★ " சாதி வேறுபாடுகளையும், தீண்டாமைக் கொடுமையையும் ஒழித்தே தீரவேண்டும் என்று அரசு கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது "

—தலைமை அமைச்சர் இந்திரா

★ நாட்டில் சாதி வேறுபாடு நீடிக்கும்வரை, சோஷலிச சமுதாயம்—தேசிய ஒருமைப்பாடு என்று பேசுவதில் பொருளே இல்லை !"

—மத்திய உணவமைச்சர் ஜெகஜீவன்ராம்

★ " சாதி வேறுபாட்டை வேருடன் களைந்தே ஆகவேண்டும்."

—மத்திய போக்குவரத்து அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ்

★ " மக்களுக்குக் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரமாவது கிடைக்கச் செய்ய அரசியல் கட்சிகளும், அரசாங்கங்களும் முழு மூச்சுடன் பாடுபட வேண்டும்."

—மத்திய செய்தித் தொடர்பு அமைச்சர் ராம் சுபாக் சிங்

புதுடில்லியில் நாராயண குரு நினைவை ஒட்டிய விழாவில் காங்கிரசு அமைச்சர்கள் பேச்சு இது !

வெட்கங்கெட்ட தமிழ் நாடு காங்கிரசு மேடைப் பேச்சாளர்களே ! — பார்த்தீர்களா, இருபதாண்டு தொடர்ந்து ஆண்ட பின் சாதிப் பிரச்சினை ஒன்றில் மட்டும் காங்கிரசு சாதித்த சாதனையை !

இந்த இலட்சணத்தில், ஆறே மாதத்தில் கழகம் சாதித்தது என்ன என்று விதரணை இல்லாமல் கேட்கிறீர்களே !

நீங்கள் இருக்கிற இடத்தைக் கொஞ்சம் சுற்றிப் பாருங்கள்—நிலைமை புரியும் !

வாங்குகிற கூலிக்கு வெற்றுரை ஆடாதீர் !

" இந்த நேரம் பார்த்துத் தானு இந்தப் 'பொண்ணு' கோடைக்கானலுக்கு வரணும்கிறேன் ! இங்கே நாங்கள் இருக்கிற இருப்பு என்ன? எங்கள் வயிற்றெரிச்சலைக் கிளப்பவா வந்து போக முடிவு செய்தது ?" என்று காமராசர், மனதுக்குள் அரித்துக் கொண்டிருக்கிருராம் !

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 7 (23—8—67) புதன்

மாணவர்களைப் பாராட்டுகின்றோம்

இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியார் தமிழகத்துக்கு வரவிருக்கின்றார் என்ற அறிவிப்பைக் கண்டதும், இந்தி எதிர்ப்புக் குழுச் சார்பில் மதுரை தியாகராயர் கல்லூரி மாணவர்கள், 'தலைமை அமைச்சருக்குக் கறுப்புக்கொடி காட்ட வேண்டும்' என விருப்பம் தெரிவித்தனர்.

மாணவர்களின் விருப்பத்தை அறிய வந்ததும் முதலமைச்சர், 'தமிழகத்துக்கு வரவிருக்கின்ற தலைமை அமைச்சர் இந்திரா காந்தியார் அவர்களுக்கு இத்தருணத்தில் மாணவர்கள் கறுப்புக் கொடி காட்டுவது தேவையற்றது' என்றும், 'அதற்குப் பதிலாக ஆட்சி மொழியாக இந்தி திணிக்கப்படுவதற்கு எதிராக ஆங்கில மொழி நீடித்திருந்துவர வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவாக இருந்துவருகின்ற தலைமை அமைச்சரின் கரங்களை வலுப்படுத்த மாணவர்கள் முன்வர வேண்டும்' என்றும் மாணவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

இதுபற்றி முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியிருப்பது இதுதான் :—

> "மொழிப் பிரச்சினை பற்றி இந்திய அமைச்சரவையில் நமக்காக இந்திரா காந்தி அவர்கள் விவாதித்து வருகின்றார். மாணவர்கள் இது போன்ற ஆர்ப்பாட்டங்களைத் தவிர்த்து, அவரது கையைப் பலப்படுத்த வேண்டும்.
>
> "திராவிட முன்னேற்றக் கழக அரசில் மாணவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். தமிழர் நலனைக் காப்பதிலும், மொழி உரிமையைக் காப்பதிலும் முன்னேற்றக் கழகம் முன்னணியில் என்றும் நிற்கும்."

செய்தியாளர்கள் மூலம் மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்த அளவுடன் முதலமைச்சர் அண்ணா அவர்கள் இருந்துவிடவில்லை. மாணவர்களை நேரில் சந்தித்து—நிலைமையை விளக்கிக் கூறி—கறுப்புக் கொடி காட்டும் கருத்தைத் தவிர்க்கும்படி கேட்டுக் கொள்ளும் பொறுப்பை, நமது பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி அவர்களிடம் ஒப்படைத்திருந்தார். அண்ணாவின் ஆணையை ஏற்றுக்கொண்டு, இந்தி எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்த மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்து, அண்ணாவின் கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறி, மாணவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளச் செய்வதில் அமைச்சர் கருணாநிதி அவர்கள் முழு வெற்றி கண்டிருக்கின்றார். மாணவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் வாயிலாக முதலமைச்சரின் வேண்டுகோளைக் கேட்டு, கறுப்புக் கொடி காட்டும் கருத்தை மாற்றிக் கொண்டுள்ளனர். இதுபற்றி மாணவர் பிரதிநிதிகள் சார்பில் எடுக்கப்பட்ட முடிவை, கீழ்க்கண்ட அறிக்கை மூலம், மற்ற மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை, இங்கு அப்படியே வெளியிடுகின்றோம் :—

> "சென்னை கல்லூரி மாணவர் பிரதிநிதிகளை இன்று (21-8-67) மாலையில் பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் அழைத்து நீண்டநேரம் அவர்களுடன் உரையாடினார். தமிழகத்துக்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி வரும்போது இந்தி ஆதிக்க எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் மாணவர்கள் கறுப்புக் கொடி காட்டுவதாக எடுத்த முடிவினைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டும், மொழிப் பிரச்சினை பற்றித் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து மாணவர்களின் பிரதிநிதிகள் பேசுவதற்கான வாய்ப்பினை அண்ணா அவர்களின் சுற்றுப்பயணம் முடிந்து சென்னை வந்ததும் ஏற்படுத்தித் தருவதாகவும் பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி கேட்டுக் கொண்டதன் பேரில், மாணவர்கள் கறுப்புக் கொடி காட்டுவதாக செய்திருந்த முடிவினைக் கைவிட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது."

இந்தித் திணிப்பு, எந்த உருவிலும் தமிழகத்தில் இடம் பெற்றுவிடுவதற்கு, அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இயங்கிவருகின்ற முன்னேற்றக் கழகம் என்றும் இணங்கிவிடாது என்பதை மாணவர்கள் அனைவரும் நன்கு அறிவர். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதன் காரணமாக அந்த எதிர்ப்பு உணர்ச்சியை, அறிஞர் அண்ணாவோ, முன்னேற்றக் கழகமோ, என்றும் கைவிட்டுவிடப் போவதில்லை.

பொதுவாகத் தமிழ் மக்களிடமும் குறிப்பாக மாணவர்களிடமும் முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கின்ற செல்வாக்கிற்குரிய பல காரணங்களில் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்ற காரணம், இந்தி மொழித் திணிப்பு முயற்சியைத் துவக்க முதற்கொண்டே அறிஞர் அண்ணா அவர்கள் தனித்த முறையிலும், கழகத்தின் வாயிலாகவும் முழுமூச்சாக எதிர்த்து வந்திருப்பதே ஆகும்; இவ்வுண்மையை மாணவர்கள் அனைவரும் அறிந்தே இருக்கின்றனர்.

ஏதாவது ஆர்ப்பாட்டம் நடைபெறுமா என்று எதிர்பார்த்து—அமைதியாக நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டமானாலும் அதில் அமளியை உருவாக்கிவிட வேண்டும் என்ற கெடுநினைப்பில் தமிழகக் காங்கிரசுத் தலைவர்கள், வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் திட்டமிட்டுச் சதிசெய்து வருகின்றனர் என்பதை, நாம் அறிந்திருப்பது போன்றே மாணவர்களும் அறிந்தே இருக்கின்றனர். மாணவர்கள் தாங்கள் மேற்கொண்டிருந்த முன்முடிவை, அண்ணாவின் வேண்டுகோளுக்கு இணங்கியும்—அமைச்சர் கருணாநிதி அவர்களின் கனிவுரைக்கு ஒப்பியும் மாற்றிக்கொண்டிருப்பதன் வாயிலாக, காங்கிரசுத் தலைவர்களின் கெடுமதிக்கு மாணவர்கள் முற்றுப் புள்ளி வைத்துவிட்டிருக்கின்றனர். தமிழகத்தில் அமைதியான அரசியல் நடைபெற்று வருவதற்குத் தங்கள் முடிவை மாற்றிக் கொண்டிருப்பதன் மூலம், மாணவர்கள், தக்க வழி அமைத்தும் உள்ளனர். இந்த அருஞ்செயலுக்காக மாணவர்கள் அனைவரையும் நாம் மனமாரப் பாராட்டுகின்றோம்.

—கா. க.

வறுமையிலிருந்து விடுதலை பெற்றோமா?

இருபதாண்டு சுதந்தரத்துக்குப் பின்னரும் இதனை எதிர்த்துப் போராடும் நிலை ஏன்?

ஏழ்மையிலிருந்து நாட்டை விடுவிக்க ஒத்துழைப்புத் தேவை

இருபது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன—சுதந்தரம் பெற்று!

எருது கட்டிப் போரடித்தால் மாளாது என்று யானை கட்டிப் போரடித்த நாடுதான் இது!

இங்கே ஏழ்மை ஒழிந்ததா—இல்லாமை நீங்கிற்றா—அறியாமை அகன்றதா ?

இருபது ஆண்டுகள் ஆகிய பின்னும்—நம்மை நாமே ஆண்டுகொண்டிருப்பதாக அவனிக்கு அறிவித்தபின்னரும்—நான்கு பொதுத்தேர்தல் நடத்திவிட்டபின்னும்—மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி முடித்தான பிறகும், ஏழ்மை—இல்லாமை—கல்லாமை—போதாமை தீண்டாமை—இத்தனையும் இருக்கின்றன என்றால், பிரிட்டிஷார் நம்மை ஆண்ட காலத்தில் நம்மீது பரிதாபப்பட்ட நாடுகளெல்லாம், இப்போது எள்ளி நகையாடத்தானே செய்யும்?

"முன்பாவது வெள்ளைக்கார அந்நியனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தீர்கள் ; இப்போது அவன் அகன்று இருபதாண்டுகள் ஆகிவிட்டனர் ; ஏன் இவைகளெல்லாம் ஒழியவில்லை—அகலவில்லை" என்று முற்போக்கு நாடுகள் நிச்சயம் கேட்கும்!

ஆண்டுக்கு ஒரு நாளாகிலும் நாமெல்லோரும் வேற்றுமைகளை மறந்து இவ்விழாவைக் கொண்டாடும் நிலை ஏற்பட்டிருந்தால் நான் மெத்த மகிழ்ச்சியடைந்திருப்பேன். நான் இங்கு வருவதற்கு முன்னால் இராஜாஜியுடன் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்கூட இதைத்தான் சொன்னார்—'இன்று ஒரு நாளைக்காவது கட்சிகளை மறந்து நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாக இருந்திருக்கலாம்' என்று ; அப்போது உடனிருந்த முன்னாள் ஆந்திர முதல்வரும் தற்போதைய மக்களவைத் தலைவருமான சஞ்சீவி ரெட்டியார்கூட, 'அப்படி இருந்திருக்கலாம்' என்று சொன்னார் ; நான் ஒன்றுமே பதில் சொல்லவில்லை ; இந்நாட்டு நிலைமை அப்படி இருக்கிறது!

பிரான்சு நாட்டில் விடுதலை நாள் விழா எப்படிக் கொண்டாடப்படுகிறது என்றால், பாடத் தெரிந்தவர்கள் பாட—ஆடத் தெரிந்தவர்கள் ஆட—ஆடவரும் பெண்டிரும், பாரிஸ் பட்டணத்திலே மகிழ்ச்சிப் பெருக்குடன் கொண்டாடுகிறார்கள்! அந்த நாளை, மதிப்பிட முடியாத ஒரு நாளாகக் கொண்டாடுகிறார்கள்! உலக நாடுகள் அனைத்திலுமே விடுதலை பெற்ற நாளை, அந்த நிலையில் தான் கொண்டாடுகிறார்கள்! நாமோ, இப்போது அவர்களுக்கும்—நமக்கும் உள்ள கணக்கைப் பார்க்கும் நிலையில் தள்ளப்பட்டிருக்கிறோம்; நாம் விடுதலை பெற்றுத்தான் என்ன பயன்?

இருபதாண்டுக்குமுன் சுதந்தரம் பெற்றபோது இந்த நாடு என்ன பாலைவனமாகவா இருந்தது? பசும் பொன், தரைக்கு அடியிலே இல்லையா? நீர் வளமும் நிலவளமும் இல்லையா? எல்லா வளமும், உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு இங்கே பூமியிலே புதைந்து கிடக்கின்றனவே! ஜப்பானிலே ஒரு துளி இரும்பு உண்டா? இங்கிலாந்திலே உணவு உற்பத்தி செய்யக்கூடிய விளைச்சல் நிலம் போதிய அளவு உண்டா?

ஒரு நாட்டில், ஒன்றிருந்தால் மற்றொன்று இருப்பதில்லை! நம் தவத்திருநாட்டிலோ, எல்லாவற்றையும் பூமி, தன் மடியில் அடக்கிவைத்திருக்கிறது ; 'தோண்டினால், உனக்கு வேண்டியதைத் தருகிறேன்' என்று பூமி மாதா கூறுகிறாள்! கொஞ்சம் தோண்டினால் ஊற்று நீர்—இன்னும் கொஞ்சம் தோண்டினால் சுண்ணாம்புக் கல்—மேலும் சிறிது தோண்டினால் செம்பு—அதன் பிறகு தங்கம்—அதற்கும் அடியிலே தோண்டினால், தங்கத்துக்கெல்லாம் மேலான—'கருப்புத் தங்கம்' என்று பொருளாதார வல்லுநர்கள் போற்றும் நிலக்கரி—இத்தனையையும் தருவதற்குத் தயாராயிருக்கிறது, நம்முடைய நிலம்! இதனைத்தான் வள்ளுவர், ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே குறிப்பால் உணர்த்தியிருக்கிறார்—

> "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்"
>
> என்ற குறள் மூலம்!

நம்மிடம் எல்லாம் இருந்தும், 'எதுவுமில்லையே' என்று தலைகுனிவதைப் பார்த்துத்தான் பூமி மாதா சிரிப்பாள்! தமிழர்கள், ஒரு பெண் தங்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தால், அதைத் தாங்கிக்கொள்ளமாட்டார்கள் என்பதை அறிந்துதான், 'பூமி மாதா சிரிப்பாள்' என்று வள்ளுவர் எழுதியிருக்கிறார்!

நம்முடைய பூமியில் வளம் இருப்பது தெரிகிறது; ஆனால் அதனைத் தோண்டி எடுக்கும் அதிகாரம் நம்மிடத்திலே இல்லை!

'சேலத்திலே இரும்பு இருக்கிறது' என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்! வள்ளுவர் கூற்றுப்படி, இரும்பைத் தன் மடியில் அடக்கிவைத்துக் கொண்டிருக்கும் கஞ்சமலை நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது—'தொழிற்சாலை வேண்டும் என்று துடிக்கிறாயே—இங்கே தோண்டி எடு—இரும்பை' என்கிறது, கஞ்சமலைப் பூமி!

அந்தப் பூமி மாதாவைப் பார்த்து, 'பொறு' என்று கூறிவிட்டு, நம்மை ஆளும் மாதாவைப் பார்க்கச் சென்றிருந்தார்—ம. பொ. சிவஞானம் அவர்கள்; ஆனால் அந்த மாதாவோ, ம. பொ. சி. அவர்களைப் பார்த்து, 'பொறுத்திருங்கள்' என்று சொல்லிவிட்டார்!

இந்த அளவுக்கு இயற்கை வளமற்ற பல நாடுகள், தாங்களும் வாழ்ந்து மற்ற நாடுகளையும் வாழவைக்கின்றன! அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகள், மற்ற நாடுகளையும் வாழவைக்க முன்வருதைப் பார்க்கிறோம்!

இரண்டாவது உலகப் போரில் இங்கிலாந்து மீது ஜெர்மன் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து, இலண்டன் நகரத்தையும், மற்ற பல நகரங்களையும் படுநாசப்படுத்தின ; அந்த நாட்டு ஆடவர்கள் இலட்சக்கணக்கில்—'படுகொலை' என்று சொல்லத்தக்க விதத்தில்—களத்திலே வீழ்த்தப்பட்டார்கள்! அந்த நேரத்திலும், ஜெர்மானிய நாட்டைப் பார்த்து இங்கிலாந்துப் பிரதமர் சர்ச்சில் வீரமுழக்கமிட்டார்—'தரை வழியிலே வந்து இங்கிலாந்தைத் தாக்கினாலும், கடல் வழியே வந்து மடக்கினாலும், வானத்திலிருந்து குண்டுகளை வீசினாலும், இங்கிலாந்திலிருந்தே நாங்கள் விரட்டப்பட்டுவிட்டாலும், கனடாவிலிருந்துகொண்டேனும் நாங்கள் எதிர்த்துப் போரிடுவோம் ; அங்கிருந்து விரட்டப்பட்டாலும், எந்த இடம் கிடைத்தாலும் அங்கிருந்துகொண்டு போராடுவோம்—வீழ்ந்துபட—மாட்டோம்' என்று!

இங்கிலாந்து நாட்டு மக்களைக் கூட்டிவைத்துக் கொண்டு அவர்களிடம் சர்ச்சில் கூறினார்—"இந்தத் தலைமுறையே அழிந்தாலும், தொடர்ந்து போரில் ஈடுபட அடுத்த தலைமுறை தயாராகவேண்டும் ; எனவே நீங்கள், குழந்தைகளை—குலக் கொடிகளை எப்படியும் காப்பாற்றி விட்டால்—அந்தக் குழந்தைகள் வேறு எல்லையில் வளர்ந்தால்—நாம் அழிந்துவிட்டாலும் பரவாயில்லை—அந்தக் குழந்தைகள் வளர்ந்து வாலிபர்களானதும், 'எனது நாடு எது?' என்று ஒருவன் கேட்க—'இங்கிலாந்துதான்' என்று இன்னொருவன் ஏக்கத்துடன் சொல்ல—'அதை, ஜெர்மானியன் அழித்துவிட்டான்' என்று மற்றொருவன் கூற—'எங்கே அந்த ஜெர்மானியன்' என்று வேறு ஒருவன் கேட்க—'வாருங்கள், புறப்படுவோம்' என்று எல்லோரும் கூறக்கூடிய அத்தகைய வீர மரபினராக உங்கள் குழந்தைகளை ஆக்கவேண்டும்" என்றான் ; உடனே அந்த நாட்டுத் தாய்மார்கள், தாங்கள் பெற்ற மழலைச் செல்வங்களைக் கப்பல்களில் ஏற்றிக் கானடா நாட்டுக்கு அனுப்பி வைத்ததாகச் செய்தி படித்தோம். அப்படிப்பட்ட இங்கிலாந்து—அழிவுப் பாதையில் தள்ளப்பட்ட நாடு—இன்று எந்த நிலையில் உள்ளது ?

ஜெர்மன் நாட்டில் குண்டு வீச்சுக்களால் வீடுகளெல்லாம் இடிந்து நாசமாயின! அந்த நாடு இந்தப் பதினைந்து ஆண்டுக்காலத்தில், தனது வீடுகளின் இடிபாடுகளையெல்லாம் சரிசெய்து

(4-ம் பக்கம் பார்க்க)

'சேரி' ஒழிப்புக்கு ஆயத்த வீடுகள் கட்டும் திட்டம்

இரஷ்யாவில் கண்டதை இங்கே செய்ய சென்னை மேயர் ஆவல்

சென்னை, ஆக. 22—

"சென்னையில் சேரி ஒழிப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக, 'ஆயத்த (ரெடிமேடு) வீடுகள்' கட்டுவதற்கான தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஒன்றினை சென்னை மாநகராட்சி வகுத்து வருகிறது; மாநகராட்சிக் கூட்டத்தில் இத்திட்டம் ஏற்கப்பட்ட பின்னர், இத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்காகத் தமிழக அரசுக்கு அனுப்பப்படும்" என்று சென்னை மேயர் திரு இரா. சம்பந்தம் கூறினார்.

சென்னையிலிருந்து வெளிவருகிற 'கான்கரார்' ஆங்கில வார இதழின் சிறப்பு நிருபருக்கு அளித்த பேட்டியில் திரு. சம்பந்தம் மேலும் கூறியிருப்பதாவது :—

"சென்னைக்குக் காவிரி ஆற்று நீர் கொண்டுவரும் திட்டத்திற்கு, இந்த ஆண்டு நவம்பரில் அடிக்கல் நாட்டப்படும்.

விடுமுறைக் காலங்களில் மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் சுற்றுலா செய்வதற்காக, நகருக்கு வெளியே முகாம்கள் திறக்கப்படும்.

சென்னை நகரில் 1933-ம் ஆண்டில் 15,942 குடிசைகள் அடங்கிய 189 'சேரி'கள் இருந்தன. தற்போது இலட்சம் குடும்பங்கள் 600 சேரிகளில் வாழ்கின்றனர்,

பல 'சேரி'களில் தண்ணீர் வசதி — விளக்கு வசதி — சாலை வசதி எதுவும் கிடையாது; புதை சாக்கடை நீர்த் திட்டமும் இல்லை. இவ்விதச் 'சேரி'கள் சென்னையின் எழிலுக்குக் களங்கம் விளைவிக்கின்றன!

இரஷ்யாவில் முக்கியமான நகரங்களில் 'ரெடிமேடு' பாகங்களைக்கொண்ட வீடுகளைக் குறுகிய காலத்தில் கட்டித் தருகின்றனர்.

இரஷ்யாவில் நகருக்கு வெளியே சொந்தத்தில் வீடு கட்டிக்கொள்ளலாம்; ஆனால், நகரில் வீடுகள் அனைத்தும் அரசுக்கே சொந்தம்.

15 நாட்களில் மலிவான செலவில் 10 மாடிக் கட்டிடங்களைக் கட்டி விடுகிறார்கள்! தனித் தனி பாகங்களைக் கொண்டு விரும்பிய வாறு விரைவில் வீடுகளைக் கட்டலாம். இவ்வித வீடுகள் 75 முதல் 100 ஆண்டுகள்வரை நீடித்து இருக்கும்.

சென்னையில் இதேபோல 'ஆயத்த' வீட்டுப் பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவத் திட்டம் ஒன்றைத் தயாரித்துவருகிறோம். 'சேரி'களில் தொழிலாளர்களுக்காக இவ்வித ஆயத்த வீடுகள் கட்ட எண்ணியுள்ளோம்.

சென்னை நகரைத் தூய்மையாகவும், வைத்திருக்க மாநகராட்சியினர் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்."

நாமக்கல்லில் கல்லூரி நிறுவும் முயற்சி

அமைச்சர் எம். முத்துச்சாமி தலைமையில் குழு அமைப்பு

நாமக்கல்லில் அரசினர் கலைக் கல்லூரி ஏற்படுத்துவது தொடர்பாக 9—8—67 அன்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துச்சாமி தலைமையில் ஒரு முன்னோடியத்தக் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில், தமிழக அரசு கல்வித் துறையின் 15—6—67 கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி கல்லூரி அமைப்பதற்கு அரசிற்குச் செலுத்த வேண்டிய மக்கள் பங்குத் தொகை ரூ. 5 இலட்சமும் கல்லூரி அமைப்பதற்குத் தேவையான இடம் 40 ஏக்கர் நிலமும் கலைப் பணியில் பங்குகொள்ள ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் அணுகிப் பெறுவதற்கு எல்லா முயற்சிகளும் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், நாமக்கல்லில், வரும் கல்வி ஆண்டில் ஆண்களுக்கென ஒரு கலைக் கல்லூரியும் மகளிருக்கென ஒரு கலைக் கல்லூரியும் ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டது; அதற்கான குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலோர் தாங்களே முன்வந்து கல்லூரி அமைப்பு நிதிக்கு மனமுவந்து தாங்கள் அளிக்க விரும்பிய தொகையைத் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள்; ரூ. 3,07,363 நன்கொடை தருவதாக உறுதியளித்தனர். உடனடியாகச் சிலர் முன்பணமாகக் கொடுத்த தொகை ரூ. 835 ஆகும்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தமது ஒருமாத ஊதியத்தை இந்த நிதிக்கு நன்கொடையாகத் தருவதாக அறிவித்துள்ளார்.

மேலும், ஆரம்ப ஆசிரியர்களும் தொழில் அதிபர்களும் பெருநிலக் கிழார்களும், ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களும் பெருந் தொகைகளை அளிக்க முன்வந்துள்ளனர். எல்லாக் கட்சிகளும் பங்குபெறும் வாய்ப்பு அளிக்கும் வகையில், மேற்கொண்டு சிலரை குழுவில் சேர்த்துக்கொள்ளும் உரிமையை நிர்வாகக் குழுவிற்கு அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

குழுவின் தலைவராக அமைச்சர் மா. முத்துச்சாமி, செயலாளராக திரு. வை. சொக்கப்பா (கோட்டாட்சித் தலைவர்), பொருளாளராக திரு. அ. இராமசாமி உடையார் (புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர்) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு ஜன சங்கங்கள்!

டாக்டர் லோகியா விளக்கம்

'இந்த நாட்டில் ஒன்றல்ல— இரண்டு ஜனசங்கங்கள் உள்ளன; ஒன்று—இந்து ஜனசங்கம்; மற்றது—முஸ்லீம்களின் ஜன சங்கம்!

"'பாரதீய ஜனசங்கம்' என்பது, இந்துக்களின் கட்சி; காங்கிரசு, முஸ்லீம்களின் ஜனசங்கம்.

"பாரதீய ஜனசங்கம், 'இந்தி' என்றும், 'இந்துக்கள்' என்றும் கூறிக்கொண்டு சதிவேலைகள் நடத்திக்கொண்டிருக்கிறது!

"முஸ்லீம்களின் ஜனசங்கமாகிய காங்கிரசு. 'முஸ்லீம்கள்' என்றும், 'உருது' என்றும் கூறிக்கொண்டு பித்தலாட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறது"

என்று டாக்டர் ராம்மனோகர் லோகியா கூறியிருக்கிறார்!

—'தினமான்' (13—6—67)

சென்னை 91-வது வட்ட

கருணாநிதி முத்தமிழ் மன்றம்

12—8—67-ல் சென்னை 91-வது வட்டத்தில் வட்டச் செயலாளர் மோகனப்பா தலைமையில் திரு வேங்கிடபுரம் பகுதியில் கலைஞர் கருணாநிதி முத்தமிழ் மன்ற அமைப்புக் கூட்டம் நடைபெற்றது; அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத்தலைவர் : வே. ரா. முனுசாமி; செயலாளர் : இரா. முத்து சிதம்பரம்; துணைச் செயலாளர் : வ. செயராசு; பொருளாளர் : மு. வேலாயுதம்; மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கடத்தல்காரர் சொத்துக்கள்

பறிமுதல் செய்யச் சட்டம்—மத்திய அரசு கொண்டுவரும்

நாகர்கோயில், ஆக. 20—

"கடத்தலில் ஈடுபடுத்தப்படும் கார்களையும் லாரிகளையும் பறிமுதல் செய்வதுடன், கடத்தல்காரர்களின் சொத்துக்கள் முழுவதையும் பறிமுதல் செய்வது பற்றியும் மத்திய அரசு சட்டம் கொண்டுவரப்போகிறது. அதனைத் தமிழக அரசு முழு மனத்துடன் ஆதரிக்கும்"

என்று தமிழக வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் ஐந்தில் ஒரு பகுதி கோதுமைதான் மத்திய அரசினால் தமிழகத்திற்குத் தரப்பட்டுள்ளது. சென்ற ஆண்டைப் போல் இந்த ஆண்டும் கோதுமை தர வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

"தமிழகத்தில் தி.மு. கழக அரசு ஏற்பட்ட பின்னர் கேரளத்துக்கு இதுவரையில் 35 ஆயிரம் டன் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது.

"கேரளத்தில் உணவு நெருக்கடி இருப்பது நமக்குத் தெரியும்; ஆனால் கேரளம் கேட்கும் அளவுக்கு அரிசி கொடுத்து உதவும் நிலைமையில் இப்போது இல்லை; தமிழ்நாட்டிலும் உணவுப் பற்றாக்குறையாக இருந்துவருகிறது.

"நவம்பர் மாதத்திற்குப் பின்னால் கேரளத்துக்குக் கணிசமான அளவு அரிசி கொடுக்கப்படும்.

"தஞ்சையில் குறுகியகால நெல் சாகுபடித் திட்டத்தினால் 5 இலட்சம் டன் அரிசி கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் குறுகியகால நெல் அறுவடை, வரும் நவம்பர் மாதத்திலிருந்து துவங்கும்; அதற்குப் பிறகு தமிழகத்தில் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கும்—கேரளத்திற்கும் அரிசி கொடுத்து உதவ முடியும்."

அகில பர்மா தமிழர் சங்கம்

புதிய தலைவராகக் கழகத் தோழர் தேர்வு

இரங்கூன், ஆக. 10—

அகில பர்மா தமிழர் சங்கத்தின் புதிய தலைவராக (1967—1969) பர்மா தி.மு.க. தோழரும் எம். ஜி. ஆர். மன்றத் தோழருமான வி. சுப்பிரமணி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த பத்தாண்டுக்காலமாக இந்தச் சங்கப் பேரவையில் அங்கம் வகிக்கும் தி. மு. க. தோழர்களும், எம்.ஜி ஆர். மன்றத் தோழர்களும், புதிய மாற்றத்தை விரும்பிய ஏனையோரும், தோழர் சுப்பிரமணி அவர்களை ஆதரித்து வாக்களித்து வெற்றிபெறச் செய்தனர்.

அகில பர்மா தமிழர் சங்கம், பர்மாவாழ் தமிழ் மக்களின் நலம் பேணவும், மொழி-கலாச்சாரங்களை வளர்க்கவும் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தனித் தமிழ்ப் பேரமைப்பாகும்.

சாதி—சமய—கட்சி பேதமற்ற தன்மை பெற்றுத் தமிழக மக்கள் அனைவருக்கும் பொதுவாக விளங்கிவரும் இச்சங்கம், தோன்றிய காலத்திலிருந்து பலவகையிலும் செல்வாக்குப் பெற்ற ஒரு சார்பினரின் ஆதிக்கத்திற்குட்பட்டு இயங்கிவருகிறது.

திரு. வி. சுப்பிரமணி இனப்பற்றும், தமிழுணர்வும் கொண்டவர்; அடக்கமும் பண்பும் உள்ளவர்; தமிழ் இலக்கியத் துறையில் நல்ல பயிற்சியுடையவர்; நல்ல மேடைப் பேச்சாளர்; வாதத் திறமை பெற்றவர்.

புதுவையில் காட்டாட்சி தர்பார்!

கழகத் தோழர்கள் காங்கிரசுக் குண்டர்களால் தாக்கப்படுகின்றனர்

வட்டச் செயலாளர் கண்டனம்

புதுவை — வம்பாகீரப்பாளையம் தி. மு. கழகத் தோழர்களையும், தாய்மார்களையும், 'பழம்பெரும் ரவுடி' என்று சொல்லப்படும் காத்து என்பவன் — கதர்சட்டை அணிந்து—'மகாத்மா காந்திக்கு ஜே' என்று சொல்லித் தாக்கியிருக்கிறான்.

கடந்த 10—8—67 அன்று கழக தோழர்களான ராமராசு, பால்ராசு, தியாகராசு, வரதராசு, லீலாராசு ஆகிய ஐந்து பேர்களையும் அவன் கடுமையாகத் தாக்கியிருக்கிறான். இதுபற்றிப் போலீசுக்குப் புகார் கொடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அடிப்பட்ட கழகத் தோழர்களையே கைது செய்து பல தொல்லைகள் கொடுத்து வருவதை அறிந்த வழக்கறிஞர் சி.பி. திருநாவுக்கரசு, ஜாமீன் கொடுத்து வழக்குப் பதிவு செய்தார்.

மீண்டும் 20—8—67 அன்று மனோகரன், மல்லிகா, அஞ்சலாட்சி ஆகிய மூவரையும் அதே ஆள் பலமாகத் தாக்கியிருக்கிறான். ஒருவருக்கு முகவாய்க்கட்டையில் பலமான அடிபட்டு, நான்கு இடங்களில் தையல் போடப்பட்டிருக்கிறது. அவருடைய நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது. இதுவரை கண்துடைப்புக்காகப் போலீசார் போவதும்—'ஆள் இல்லை' என்று சொல்லுவதும், 'அடிப்பதுபோல் அடி—அழுவதுபோல் அழுகிறேன்' என்ற நிலைமையிலும் இருந்து வருகிறார்கள்.

ஊரில் நடமாட முடியாத நிலையில் கழகத் தோழர்கள் இருந்து வருகிறார்கள்.

"இதுபற்றி உடனடி நடவடிக்கைகளை எடுக்கப் புதுவை அரசு ஆவன செய்ய வேண்டும்" என வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம் கேட்டுக்கொள்ளுகிறார்.

குடிநீர்ப் பிரச்சினை

தமிழக அரசு கவனம் செலுத்தும்

நாகர்கோயில், ஆக. 23—

"மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்ட பின்னருங்கூட, குடிநீர் வசதி இல்லாத கிராமங்கள் ஏராளம் இருக்கின்றன.

குடிநீர்ப் பிரச்சினையைக் கவனிக்க அரசு முக்கியக் கவனம் செலுத்தும்.

"ஊராட்சி ஒன்றியத்தைக் கலைத்துவிடப் போவதாக வந்துள்ள வீண் வதந்தியை நம்பாதீர்கள்; ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பு அதிகமாக இருக்கிறது.

வதந்தியை நம்பாதீர்!

ஊராட்சி மன்றங்கள் திறமையாகச் செயல்பட அதனுடைய அமைப்பு முறை மாற்றி அமைக்கப்படுவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது."

—அமைச்சர் மதியழகன்

(பழவிளை குடிநீர்த் திட்டத் திறப்பு விழாவில்)

நெய்வேலியில்

நாவலர் மன்றத் திறப்புவிழா

20—8—67-ல், நெய்வேலி-2 வளையமாதேவிசாலை கே.வி.கே சாமி திடலில், மன்றத் தலைவர் நெ. சி. வெங்கடாசலம் தலைமையில் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ. பி.எல்., எம்.பி. அவர்கள், நாவலர் மன்றத்தைத் திறந்துவைத்தார்.

புலவர் அறிவுடைநம்பி அண்ணா படத்தையும், என். இராசாங்கம் எம்.எல்.ஏ. நாவலர் படத்தையும், எஸ். எஸ். நேசன் கருணாநிதி படத்தையும் திறந்துவைத்தனர்.

தோழர்கள் பழ. தட்சிணாமூர்த்தி, இரெ. அறிவெழில், பா. வை. அழகிரிசாமி, வள்ளியப்பன், வி. கிருஷ்ணமூர்த்தி, என். இராசாங்கம், எஸ். எஸ். நேசன், இரா. கரிகாலன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மின்கழகக் கணக்காயர் மாநில மாநாடு

சென்னையில் நடைபெற ஏற்பாடு

சென்னை, ஆக. 19—

"தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் சங்க முதலாவது மாநில மாநாடு, வருகிற செப்டம்பர் 9, 10 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெறவிருக்கிறது.

"மாநாட்டில் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களும், ஏனைய அமைச்சர்களும், மற்றும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

"மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக சி. இரத்தினசபாபதி; செயலாளர்களாக சு. மோகனதாசு, வை. கந்தசாமி; பொருளாளராக பழனிச்சாமி; தொண்டர் படைத் தலைவராக பாஷ்யம்; மலர்க் குழுத் தலைவராத இரா. சடகோபன்; உணவுக் குழுத் தலைவராக வரதராசன் ஆகியோர் பொறுப்பேற்று பணியாற்றிவருகின்றனர்;' என்று வரவேற்புக் குழுச் சார்பில் இரத்தினசபாபதி அறிவிக்கிறார்.

குன்னூர் நகராட்சிக் கூட்டம்

கழக உறுப்பினரின் தீர்மானம் நிறைவேறியது

குன்னூர் நகராட்சிமன்றத்தின் தனிக் கூட்டம், 16—8—67-ல் நடைபெற்றது; அதுபோது, குன்னூர் நகரச் சந்தையில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் கட்டிடத்திற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி, அவர்களைக் கொண்டு கல்நாட்டு விழா நடத்துவதெனவும், காந்திபுரம் 3-வது வட்டத்தில் கட்டி முடியும் தறுவாயில் உள்ள மகப்பேறு விடுதியை சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களைக் கொண்டு திறப்பது எனவும், மகப்பேறு விடுதிக்கு, 'அறிஞர் அண்ணா மகப்பேறு விடுதி' எனப் பெயர் சூட்டுவதென்றும் தி. மு. க. உறுப்பினர் கே. பி. முருகேசன் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

திண்டுக்கல் 5-வது வட்டார சின்னசாமி நினைவு மன்றம்

திண்டுக்கல் 5-வது வட்டார சின்னச்சாமி நினைவுமன்றம் நிறுவ உறுப்பினர் கூட்டம் தோழர் பி. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றபோது, செயலாளராக எஸ். ஏ. இராசன்; துணைச் செயலாளராக ப. நாராயணன்; அவைத் தலைவராக எஸ். முருகன்; பொருளாளராக பி. பொன்னுசாமி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாகத் தோழியர் பேபி அம்மையார் உட்பட ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நல்லவர் உள்ளம் நோக...

"நம் நாட்டிலிருந்து ஆங்கிலத்தை விரட்டாவிடில், வானமே இடிந்து விழுந்துவிடும் என்று சிலர் நினைக்கிறார்கள்! ஆங்கிலம் அப்படி என்ன தவறு இழைத்துவிட்டது? உலகம் முழுவதுமே ஏற்றுக்கொண்டுள்ள ஒரு மொழியை நாம் ஏன் ஏற்கக்கூடாது?

"சுவீடன் போன்ற நாடுகளில்—கூடுமான வரையில்—அதிகம் பேர் ஆங்கிலத்தைக் கற்க ஆவனவெல்லாம் செய்துவருகின்றனர். ஆனால் இங்கோ, எதைச் சொன்னால்—எதைச் சொல்லி, நிறையப் பேர் பாராட்டைப் பெற முடியும் என்ற போக்கில் பேசிவருகிறார்கள்!

"ஆங்கிலம் கூடாது என்று நான் சொல்லியிருந்தால் நான் இன்னமும் பெரிய மனிதனாகிவிட்டிருப்பேன்—என் எசமானர்களைத் திருப்தி செய்தவனாயிருப்பேன்!"

—குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி

(திருச்சி சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி விடுதி திறப்புவிழாவில்)

வறுமையிலிருந்து விடுதலை பெற்றோமா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கோண்டு, இடைபாடுள்ள நாடு எங்கே இருந்தாலும் அதற்கு உதவிக்கொண்டு வருகிறது!

அந்த ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த 21 பேர் வந்து என்னைச் சந்தித்தார்கள்—"உருளைக் கிழங்குப் பயிருக்கு வரும் நோயைத் தடுக்க வழி கண்டுபிடித்திருக்கிறோம்; உங்கள் நாட்டிற்கும் அதைச் சொல்லிக் கொடுக்கிறோம்" என்றார்கள்; 'எங்களுக்குச் சம்பளம்கூட வேண்டாம்; உதகமண்டலத்தில் உருளைக் கிழங்கு விளையும் பூமியைக் காட்டுங்கள்; அங்கே நாங்கள் தங்க விடுதி ஏற்பாடு செய்யுங்கள் போதும்; வேறு எதுவும் வேண்டாம்' என்று கேட்டுக்கொண்டார்கள்; நான் அதைக் கேட்டு வியந்தேன். அவர்கள், டான்சியா நாட்டில் இதேபோல் உருளைக் கிழங்குக்கு வரும் நோயைத் தடுத்திருப்பதாகவும், அங்கே அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்ட வசதிகளையும் என்னிடத்திலே பெருமையுடன் எடுத்துச் சொன்னார்கள்; அப்போது நான் சொன்னேன்—'இந்தியாவையும் டான்சியாவையும் பிரித்துப் பார்க்கவேண்டாம்; அதேபோல இங்கும் வசதி செய்து கொடுக்கிறோம்' என்று.

ஜப்பான் நாடும் போரில் தரைமட்டமாக்கப்பட்டது. அது ஒரு நாடு அல்ல—ஒரு தீவு! அதுவும் எரிமலைகளுக்குப் பேர்போனது! 'எந்த நேரத்தில் எரிமலை வெடிக்குமோ' என்ற அச்சத்துடனேயே பல்லாயிரக்கணக்கான மக்கள் எரிமலைக்குப் பக்கத்திலேயே வசித்துவருகிறார்கள்! எரிமலையைவிடப் பெரிய அழிவுச் சக்தியான அணுகுண்டு ஜப்பானில் இரண்டு இடங்களில் வீசப்பட்டன; அந்த இடத்தை நான்கூடச் சென்று பார்த்தேன்; அந்த இடங்களில் உள்ள பெண்கள் பலர் வயதாகியும் திருமணமாகாமலே இருந்துவருகின்றனர்; அதற்குக் காரணம் என்ன என்று நான் விசாரித்தேன்; 'அணுகுண்டு வீசியபோது கருவுற்றிருந்த பெண்மணிகளின் கருப் பைக்குள்கூட அணுக்கதிர் துளைத்துச் சென்று அந்தக் கருவில் இருந்த குழந்தைகள்மீதும் பாய்ந்திருக்குமாம்; அப்படிப்பட்ட பெண்களைத் திருமணம் செய்துகொண்டால் பிறக்கும் குழந்தை ஊனமாகப் பிறக்கும்' என்று பலர் அஞ்சுகிறார்களாம்! அதனாலேயே அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்களை மணந்துகொள்ள எவரும் மறுக்கிறார்களாம்! அப்படிப்பட்ட கொடுமைகளையெல்லாம் தாங்கிக்கொண்ட ஜப்பான், மீண்டும் தனது தொழில் வளத்தைப் பெருக்கிக்கொண்டு மற்ற நாடுகளுக்கும் உதவக்கூடிய நிலையில் வளர்ந்திருக்கிறது!

ஜப்பானில் உள்ள ஒரு தொழிற்சாலைக்குச் சென்றிருந்தேன்; அங்கே, 'கிரேன்' என்று சொல்லப்படும் பெரிய பெரிய பாரந்தூக்கிகள்—ஆயிரம் டன் முதல் ஐயாயிரம் டன்வரை பாரத்தைத் தூக்கக்கூடிய இரும்புத் தூக்கிகள் செய்யப்படுவதைப் பார்த்தேன்; அங்கு அப்போது செய்யப்பட்ட இரும்புத் தூக்கி ஆஸ்திரேலியாவுக்காகத் தயாரிக்கப்பட்டது. ஜப்பானுக்கும் — ஆஸ்திரேலியாவுக்கும் எத்தனை ஆயிரம் மைல்கள் இருக்கின்றன என்பதை, பூகோளத்தைப் பார்த்தால் தெரியும்.

அப்படிப்பட்ட ஜப்பான் நாட்டில், ஒரு துளி இரும்பு பூமியில் கிடைக்கிறதா என்றால், இல்லை! இங்கே நாம் துருப்பிடித்துவிட்ட இரும்பை, பழைய இரும்புக் கடையில் கொடுத்துவிடுகிறோம்—அந்த இரும்பைத்தான் இங்கிருந்து வாங்கிச் சென்று, அத்தகைய பாரந் தூக்கிகளைச் செய்கிறார்கள்! அப்படிப்பட்டவைகளல்லவா நாடுகள்?

போர் அழிவுக்குப் பிறகும் இந்த நாடுகளெல்லாம் தன்னை மீண்டும் வளப்படுத்திக்கொண்டு தரணியில் தலைநிமிர்ந்து நிற்பதுடன், மற்றவர்களுக்கும் உதவ முன்வந்திருக்கின்றன!

நாமோ, சுதந்தரம் பெற்று இருபது ஆண்டுகளாகின்றன! கிடைத்த சுதந்தரம், அந்நியர் பிடியிலிருந்து விடுபட்டது ஒன்றுதான்! அறியாமை—வறுமை — இல்லாமை — போதாமை — இவற்றிலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை! இவற்றையெல்லாம் எதிர்த்துப் பெரியதொரு போராட்டம் நடத்தவேண்டிய நிலையில் நாம் இன்று இருக்கிறோம்!

காங்கிரசுக்காரர்கள் இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை! அவர்கள் நம்மைத் தாறுமாறாகப் பேசுவதாக இங்கே கூறினார்கள்; இதைக் கேட்டு நான் கோபப்படவில்லை. இருபது ஆண்டுகளாக அவர்கள் பேசாததையா இனிப் பேசப் போகிறார்கள்? இன்னும் என்ன இருக்கிறது அவர்கள் பேசுவதற்கு? எனவே அவர்கள், 'நாம் ஏன் தோற்கடிக்கப்பட்டோம்' என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதைவிடுத்து என்னை ஆத்திரமூட்டிவிடலாம் என்று அவர்கள் எண்ணவேண்டாம்! எனக்கு எப்போதுமே கோபம் வராது! அவர்கள் எவ்வளவு ஆத்திரமூட்டினாலும், நான் அவர்கள் மீது பரிதாபப்படுவேனே தவிர, ஆத்திரம் அடையமாட்டேன்!

ஆகையால், என்னைத் தூற்றித்திரிவதை விட்டுவிட்டு, தங்கள் ஆண்ட அனுபவத்தை எனக்குச் சொல்லவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்களுடைய அனுபவத்தையும் அறிவுரைகளையும் தருவதுதான் உண்மையான சனநாயகத்துக்கு எடுத்துக்காட்டாகும்!

ஆண்டு அனுபவம் பெற்றவர்கள் ஒருபுறமும்—நிபுணர்கள், நல்லறிவாளர்கள் மற்றொருபுறமும்—ஆளும் அரசினர் இன்னொருபுறமும் இருந்து இந்த மூவரின் கூட்டுடனும் ஒததுழைப்புடனும் செயலாற்றினால், ஏழ்மையிலிருந்து இந்த நாட்டை விடுவிக்கலாம்!"

---அறிஞர் அண்ணா

(விடுதலை நாள் விழாக் கூட்டத்தில்)

'சிவசேனை--ஓர் தீயசக்தி'

மத்திய அமைச்சர் கடும் தாக்கு!

பம்பாய். ஆக. 22—

"நாட்டில் எங்கு வேண்டுமானாலும் வேலை தேடிக்கொள்ள ஒவ்வொரு இந்தியனுக்கும் சட்டப்படி உரிமை இருக்கிறது; இதை யாராலும் தடுக்க முடியாது. வேலைப் பிரச்சினை என்பது உண்மையில் வறுமைப் பிரச்சினைதான்!

"நாட்டை நாம் பலவிதமாகப் பிரித்து வைத்திருப்பது போதாதா? பணக்காரர்கள், ஏழைகள் என்ற பிரிவினைதான் இருக்கிறதே! ஏழைகளுக்குள்ளும், 'தென்னிந்திய ஏழை—மகாராட்டிர ஏழை' என்று வேறு பிரிக்க வேண்டுமா?"

என்று, மத்திய உள்துறை அமைச்சர் ஒய். பி. சவாண் இங்கு பேசுகையில் கேட்டார்.

சிவசேனையின் வன்முறைச் செயல்களைக் கண்டித்து, மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"நாடு முழுவதிலும் தலைதூக்கி வரும் பல தீயசக்திகளில் சிவசேனையும் ஒன்றாகும். மகாராட்டிரத்தின் நற்பெயரை இந்த இயக்கம் குலைத்துவிட்டிருக்கிறது. இத்தகைய போக்குகளை வளர்ப்பதற்காக சிவாஜியின் பெயரை உபயோகிக்க வேண்டாமென்று இந்த இயக்கத்தை நடத்துபவர்களைக் கடவுளின் பெயராலும் மகாராட்டிரத்தின் பெயராலும் கேட்டுக்கொள்கிறேன்.

"மகாராட்டிரர் அல்லாதாரைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பில் தவறும் எந்த அரசும், 'அரசு' என்ற பெயருக்கே தகுதியற்றதாகும்."

சிவசேனை நடவடிக்கை

ஆராய தி. மு. க. சார்பில் வி. கிருஷ்ணமூர்த்தி செல்கிறார்

சென்னை, ஆக. 28—

"பம்பாயில் சிவசேனையினரால் தென்னிந்திய மக்களுக்கு எந்தெந்தவகையில் தொல்லைகள் ஏற்படுகிறது — மகாராட்டிா அரசு இது தொடர்பாக எப்படிநடந்துகொள்கிறது என்பதைக் கண்டறிவதற்காக தி. மு. க. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி இன்று பம்பாய் சென்றிருக்கிறார்.

ஏற்கனவே, இடது பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உமாநாத் பம்பாய் சென்றிருக்கிறார்.

இவர்கள் இருவரும் பம்பாயில் மூன்று நாட்கள் தங்கியிருந்து சிவசேனையினரின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து, அதுபற்றி அந்தந்த கட்சிகளுக்கு ஒருவார காலத்திற்குள் அறிக்கை கொடுப்பார்கள்.

மேற்கண்ட தகவலை அமைச்சர் மு. கருணாநிதி செய்தியாளர்களிடம் கூறினார்.

நடக்க இருப்பவை

25--8--67

அரியக்குடி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: மு. அ. சா. பாலாறு; பேசுவோர்: நாகலிங்கம், அ. வே. அரவரசன். [சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.]

மொழிப் பிரச்சினை!

தலைமை அமைச்சருடன் அறிஞர் அண்ணா விவாதிப்பார்

சென்னை, ஆக. 23—

தலைமையமைச்சர் இந்திரா காந்தியை, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நாளை மதுரையில் சந்திப்பார்கள்.

மதுரையில் இரண்டு மணி நேரம் தலைமையமைச்சர் தங்கக்கூடுமென்றும், அந்நேரத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறுமென்றும் தெரிகிறது.

இந்தச் சந்திப்பின்போது, மொழிப் பிரச்சினை குறித்துத் தலைமை அமைச்சரும் — முதலமைச்சரும் விவாதிக்கக்கூடும்.

தமிழக அரசு அண்மையில் மத்திய அரசுக்கு மொழிக் கொள்கை பற்றி அளித்த அறிக்கையின் அடிப்படையில், தலைமையமைச்சருடன் அறிஞர் அண்ணா அவர்கள் பேசக்கூடும் என்று தெரிகிறது.

காங்கிரசில் இப்போது யாருக்கு மதிப்பு?

சென்னை, ஆக. 22—

"செக்கிழுத்த வ. உ. சிதம்பரனார், போன்றவர்கள், காங்கிரசுக் கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள்! முன்பெல்லாம் காங்கிரசில், செக்கிழுத்தவர்களுக்குத்தான் மதிப்பு!

"ஆனால் இப்போதோ, 'செக்' கிழிப்பவர்களுக்குத்தான் காங்கிரசில் மதிப்பு!"

--அமைச்சர் மு. கருணாநிதி

(91-வது வட்ட கூட்டத்தில்)

நன்றியறிவிப்பு

★

21—8—67 அன்று நடைபெற்ற சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதிக்கான தமிழகச் சட்டமன்ற மேலவை இடைத் தேர்தலில் கழகச் சார்பில் போட்டியிட்ட தோழர் க. அறிவழகன் எம்.ஏ. அவர்களுக்குப் பேராதரவு தந்து வெற்றி பெறச் செய்த வாக்காளர்களான ஆசிரியர் பெருமக்களுக்கும், ஒத்துழைப்புத் தந்த கழகத் தோழர்களுக்கும் -- அமைப்புக்களுக்கும் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களின் சார்பிலும், தலைமைக் கழகச் சார்பிலும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை-13
23—8—1967

என். வி. நடராசன்,
அமைப்புச் செயலாளர், தி.மு.க.

பன்மொழிப்புலவர்

கா. அப்பாதுரையார் மணிவிழா

சென்னையில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் மணிவிழா, 20—9—67 புதன் கிழமையன்று சென்னை எட்வர்டு எல்லியட்ஸ் ரோடு—இராஜேசுவரி மண்டபத்தில், தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

மணிவிழாவிற்கு நன்கொடை தர விழையும் நண்பர்கள், 'முத்துராமலிங்கம், பொருளாளர், அப்பாத்துரையார் மணிவிழாக் குழு, 21, திருமலைப் பிள்ளை ரோடு, சென்னை—17' என்ற முகவரிக்கு நிதியை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டப்படுகிறார்கள்.

நீலநாராயணன்,
செயலாளர், மணிவிழாக் குழு

பச்சையப்பன் கல்லூரி பேரவைத் துவக்கவிழா

24—8—67 மாலை 4-மணிக்கு பச்சையப்பன் கல்லூரி பேரவைத் துவக்கவிழா நடைபெறும்; நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி வணக்கப் பாடல்கள் பாடுவார்; அமைச்சர் மு. கருணாநிதி துவக்கவுரையாற்றுவார்.

கலைவாணர் நினைவு நாள்

அமைச்சர்கள் - தலைவர்கள் பங்கேற்பர்

சென்னை, ஆக. 19—

"ஆக. 29 முதல் செப். 4-ம் நாள்வரை தியாகராயநகர் வாணிமகாலில் நடைபெறவிருக்கும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் 11-ம் ஆண்டு நினைவு விழாவில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா, ஏனைய அமைச்சர்களான இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, சாதிக் பாட்சா, செ. மாதவன், முத்துச்சாமி ஆகியோர் கலந்துகொள்வர்.

"மேயர் இரா. சம்பந்தம், மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள்—தமிழ்ப் பேராசிரியர்கள் — கலைஞர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்"

என்று, கலைவாணர் நிலையத்தைச் சேர்ந்த திரு. வெ. நாராயணன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.